முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1502

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.11.2023,** வியாழக்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பரபிரம்ம இரகசியங்கள் கண்ட குருவே
வரம்பல பெற்று இந்த கலியுகத்தில்
வள்ளலாக வாழுகின்ற ஞான குருவே
2. குரு அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
கூறிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள், 09.11.2023, வியாழக்கிழமை)
குறையிலா அரங்கன் தர்மஞானம் விரைந்து உலகமெல்லாம் பரவிநிற்க
வினவிடுவேன் உலகே ஞான லோகமாகும்
3. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தில் தொண்டர்களாக இணையும் அன்பர்களுக்கெல்லாம்
எல்லோருக்கும் ஞானவான்கள் என்கின்ற பேரானந்த கதி
இயல்பாக அரங்கன் காட்டும் தொண்டு வழியே
4. வழிதனில் அவரவர்க்கும் கிட்டி இனிதே
வல்லமைபட இந்த உலகமெங்கும் ஞானவான்கள் படை
படைபெருகி இந்த கலியுகத்தில்
பழுதின்றி ஞானிகள் வெளிப்படும் வண்ணம்
5. தடையற ஞானசித்தர் காலமோடு
தக்கபடி ஞானிகளின் ஆட்சியதும்
இடரின்றி சடுதி உருவாகும்
இந்தபேருலகம் அமைதி பாதுகாப்பு மிகுதிகாணும்
6. காணவே அரங்கன் காட்டுகின்ற
கட்டளையாக தர்ம ஞான கொள்கையே
தட்டாது உலகோர் பின்பற்றி வந்து
தர்மவழி கடைபிடித்தால் போதும்

7. போதுமப்பா உலகுக்கு மாற்றம் உண்டு
புண்ணியத்தால் இந்த மாற்றம் சடுதி கண்டு
ஆற்றல்பட ஞான லோகம் ஆகுமப்பா
ஆளுமையும் ஞான ஆட்சியாக உருவாகக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–